
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்
RNI-TNTAM/2023/88253




| Vol: 02 | Issue: 33 | 4 Pages | 2.9.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 33 | 4 பக்கங்கள் | 2.9.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்**
**உடல்சுவை யுண்டார் மனம்**

**விளக்கம்:**
ஓர் உயிரின் உடம்பைச் சுவையாக உண்டவரின் மனம் கொலைக்கருவியைக் கையில் கொண்டவரின் நெஞ்சம் போல் நன்மையாகி அருளைப் போற்றாது.

## கூகுள் நிறுவனத்துடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை, செப் .2

தமிழகத்தை தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக்குவதற்கும், 2030ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை எட்டுவதற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.

உலக நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்களை தமிழகத்தில் தொழில் முதலீடுகளை செய்ய வைப்பதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டு வருகிறார். இதற்காக முதலமைச்சர் துபாய், சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு முதலீடுகளை ஈர்த்து வந்தார்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 27ந் தேதி சென்னையில் இருந்து அமெரிக்காவுக்கு அரசு முறை பயணமாக புறப்பட்டு சென்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அங்குள்ள சான்பிரான் சிஸ்கோ சென்றடைந்த அவருக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அங்கு நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில் அவர் பங்கேற்றார். இதில் முன்னணி தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்த மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 6 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தமிழகத்தில் 4,100 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒரே நாளில் ரூ.900 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளன.



இந்நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கூகுள் தலைமை அலுவலகத்தில் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளன.

தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம் அமைக்க கூகுளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ், 20 லட்சம் மாணவர்களுக்கு ஏ.ஐ. திறன் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து ஆப்பிள், கூகுள், மைக்ரோ சாப்ட் நிறுவனங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

## கிரீஸ் நாட்டில் மாதக் கணக்கில் அவசர நிலை.. கொத்துக்கொத்தாக செத்து மிதக்கும் மீன்கள் வீடியோ



கிரீஸ், செப் 2

கிரீஸ் நாட்டில் மத்திய பகுதியில் உள்ள துறைமுக நகரமான வோலோஸ் [Volos] நகரத்தில் உள்ள கடற்கரை மற்றும் நீர் நிலைகளிலிருந்து மீன்கள் கொத்துக் கொத்தாக உயிரிழந்து மிதப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அங்கு ஒரு மாத காலத்துக்கு அவசர நிலை அறிவிக்கும் அளவுக்கு நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் சென்றுள்ளது.

சுமார் 100 டன்களுக்கும் அதிகமான மீன்கள் உயிரிழந்து மிதக்கின்றன. காலநிலை மாற்றம் காரணிகளால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதிகப்படியான மீன்களின் உயிரிழப்பு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு அழுகிய மீன்களால் உடல் நலக்குறைவு ஏற்படும் அபாயமும் உள்ளது.

உயிரிழந்த மீன்களை அகற்றும் பணியில் உள்ளூர் நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதற்கிடையே இறந்த நிலையில் மீன்கள் கரை ஒதுங்கி குமிந்து கிடக்கும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

## 22 பேருடன் சென்ற ரஷிய ஹெலிகாப்டர் மாயம்



ரஷ்யா, செப். 2

ரஷியாவில் எம்ஐ8டி ரக ஹெலிகாப்டர் ஒன்று வாக்கசெட்ஸ் எரிமலை பகுதியில் இருந்து நிக்கோலேவ்கா கிராமத்தில் உள்ள தளத்திற்கு புறப்பட்டது. ஆனால்,ஹெலிகாப்டர்புறப்பட்டசிலமணிநேரங்களில்திட்டமிடப்பட்ட நேரத்தில் தொடர்பை துண்டித்தது.

இந்த ஹெலிகாப்டரில் மூன்று பணியாளர்கள் மற்றும் 19 பயணிகள் என மொத்தம் 22 பேருடன் சென்ற ரஷிய ஹெலிகாப்டர் நாட்டின் கிழக்கு கம்சட்கா தீபகற்பத்தில் காணாமல் போனதாக மத்திய விமானப் போக்குவரத்து அமைப்பின் முதற்கட்டத் தகவல் வெளியானது.

இந்நிலையில், மாயமான ஹெலிகாப்டரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

1960 களில் வடிவமைக்கப்பட்ட இரண்டு எஞ்சின் ஹெலிகாப்டரான எம்ஐ8 ரஷியாவிலும், அண்டை நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.

முன்னதாக ஆகஸ்ட் 12 ஆம் தேதி, 16 பேருடன் பயணித்த எம்ஐ8 ஹெலிகாப்டர் ரஷியாவின் தூர கிழக்குப் பகுதியான கம்சட்காவில் அதிகாலையில் விபத்துக்குள்ளானது.

கம்சட்கா தீபகற்பம் அதன் இயல்புக்காக சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமானது. இது மாஸ்கோவிற்கு கிழக்கே 6,000 கிமீ (3,728 மைல்கள்) மற்றும் அலாஸ்காவிற்கு மேற்கே சுமார் 2,000 கிமீ தொலைவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மனைவியை மாட்டி விட அவரது காரில் கஞ்சா செடி வளர்த்த கணவர் கைது



சிங்கப்பூர், செப். 2

சிங்கப்பூரில் 37 வயதான டான் சியாங் லாங்கிற்கு 2021 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. ஆனால் ஒரு வருடத்திற்கு பிறகு தனது மனைவியைபிரிந்தார் சியாங்லாங். ஆனால் அவர்கள் விவாகரத்து பெறவில்லை.

சிங்கப்பூர் சட்டப்படி திருமணம் முடிந்து 3 ஆண்டுகள் ஆகியிருந்தால் மட்டும் தான் விவாகரத்து கோரமுடியும். ஆனால் தம்பதியினரில் யாராவது ஒருவரின் மேல் குற்ற வழக்கு இருந்தால் சீக்கிரம் விவாகரத்து பெறமுடியும்.

ஆகையால் கணவன் ஒரு திட்டம் தீட்டியுள்ளான். 500 கிராம் அளவிலான கஞ்சா செடிகளை வாங்கி மனைவிக்கு தெரியாமல் அவரது காரில் பின்புறம் நட்டு வைத்துள்ளார். இவற்றில் பாதி கஞ்சா செடிகள் நன்றாக வளர்ந்துள்ளது.

பின்னர் போலீசார் அவரது காரை சோதனை செய்த போது போதைப் பொருட்களை கண்டுபிடித்து அவரை கைது செய்தனர். ஆனால் போலீசாரின் விசாரணையில் அவர் கஞ்சா வளர்த்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. அப்போது அவரது காரில் பொருத்தப்பட்டிருந்த கேமராவை ஆய்வு செய்த போது அவரின் கணவன் கஞ்சா செடிகள் நட்டத்தை போலீசார்கண்டுபிடித்தனர்.தனது மனைவிக்கு ஆயுள்தண்டனைவிதிக்கப்படும் என நினைத்துக்கொண்டிருந்த வேளையில் கணவரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். தற்போது இவருக்கு சுமார் 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பபட்டது. சிங்கப்பூரில் போதைப்பொருட்கள் பயன்படுத்தினால் அதற்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதுரை இ.பி.ஜி பள்ளியில் தேசிய விளையாட்டு தின விழா

மதுரை, செப். 2

மதுரை இ.பி.ஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின், 39 வது தேசிய விளையாட்டு தின விழா நடைபெற்றது.

மேஜா் தயான்சந்த் பிறந்த நாளான ஆக. 29ஆம் தேதி தேசிய விளையாட்டு தினமாகக் கடைப்பிடிக்கப் பட்டுவருவதையொட்டி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கானபல்வேறுவிளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், ஆசிரியர் தனராஜேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக நாகர்கோவில் அரசு உயர்நிலைப் பள்ளி டாக்டர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் கலந்து கொண்டார்.

மேலும், சிறப்பு கௌரவ விருந்தினராக டி நோபிலி மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியின் முதல்வரும் தாளாளருமான அடைக்கலராஜா மற்றும் தாளாளர் லூசிலா ஆகியோர் கலந்து கொண்டனர்.



இப்போட்டியில் செடிகள், மூங்கில் மரங்கள் போன்ற பல்வேறு பசுமை மரங்கள் வளர்ப்பது குறித்து, விழிப்புணர்வாக ஆடல் பாடல்களுடன் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

மேலும், சிறுவர்களுக்கான ஆடல் பாடல், தண்ணீர் நிரப்பும் போட்டி, கராத்தே, சிலம்ப போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டி பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவில், இ.பி.ஜி மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியின் முதல்வர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## நிறைவடைந்த பணிகள்: ஊட்டி மலை ரெயில் சேவை மீண்டும் தொடக்கம்



மேட்டுப்பாளையம், செப். 2

மேட்டுப்பாளையம்ஊட்டி இடையே சிறப்பு வாய்ந்த மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. யுனெஸ்கோ அந்தஸ்து பெற்ற இந்த மலை ரெயிலில் பயணம் செய்ய தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவர்.

இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தில் பெய்த தொடர் கனமழையின் காரணமாக கடந்த மாதம் அடர்லி – ஹில்குரோவ் ரயில் நிலையங்களுக்கு இடையே நிலச்சரிவு ஏற்பட்டு தண்டவாளத்தில் பாறாங்கற்கள், மண் சரிந்து தண்டவாளம்சேதமடைந்தது.சேதமடைந்ததண்டவாளத்தை சீரமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்ததாலும் கனமழை எச்சரிக்கையாலும் நேற்று (ஆக.31) வரை மலை ரெயில் சேவையை ரத்து செய்து தென்னக ரெயில்வே சேலம் கோட்ட நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டு இருந்தது.

இந்நிலையில் தண்டவாள பராமரிப்பு பணிகள் முழுமையாக நிறைவு பெற்றதன் காரணமாக செப்.1 (இன்று) முதல் மீண்டும் மேட்டுப்பாளையம் – ஊட்டி இடையே மலை ரெயில் சேவை தொடங்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இன்று மலை ரெயில் மீண்டும் வழக்கம்போல இயக்கப்பட்டதால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.



மதுரை மாவட்டம் கே புதூர் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் இயக்கத்தின் சார்பாக மாபெரும் கூட்டம் நடைபெற்றது இதில் பொதுமக்கள் மற்றும் சங்கத்தின் சார்பாக தலைவர் அன்சாரி அபூபக்கர் ஒசாமா மற்றும் அமைப்பு சார்ந்த பொதுமக்கள் ஏராள மக்கள் முன்னிலையில் நடந்தது



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் 30 ஆண்டு துவக்க விழா, அப்பம்பட்டு புகழ் சையத் ஸ்வீட் முட்டை மிட்டாய் மற்றும் ஸ்ரீ மனக்குல விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச இருதயம் மற்றும் பொது மருத்துவ முகாம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் த.மு.மு.க மாநில செயலாளர் முஸ்தாக்தீன் , செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ம.ம.க மாநில செயற்குழு உறுப்பினர்கள் சையது உஸ்மான், அலாவுதீன் ஆகியர்கள் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தனர். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காபியில் விஷம் கலந்து இளம்பெண் கொலை: கூடுதல் வரதட்சணை கொடுக்காததால் கணவர் வீட்டார் ஆத்திரம்

ஊட்டி, செப். 2

நீலகிரி மாவட்டம் ஊட்டி பென்னட் மார்க்கெட் பகுதியை சேர்ந்தவர் ஜவஹருல்லா(வயது 50). ஆட்டோ டிரைவர். இவருடைய மனைவி யாஸ்பின்(47). இவர்களுக்கு இம்ரான்(27), முக்தார்(24) ஆகிய 2 மகன்கள் உள்ளனர். இதில் இம்ரான், ஊட்டி வண்டிச்சோலை பகுதியை சேர்ந்த அப்துல் சமதுநிலாபர்நிஷா தம்பதியின் மகளான ஆஷிகா பர்வீன்(22) என்பவரை காதலித்து இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த 2021ம் ஆண்டு ஜூலை 15 ந்தேதி திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 வயதில் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 23ந்தேதி வாயில் நுரை தள்ளிய நிலையில் ஆஷிகா பர்வீன் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்பட்டது. ஆனால், அவரது சாவில் மர்மம் இருப்பதாக உறவினர்கள் குற்றம் சாட்டினர்.

இதுகுறித்து ஊட்டி மேற்கு போலீசார், சந்தேக மரணம் என்று வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வந்தனர். மேலும் அவரது உடல், ஊட்டி அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் அறிக்கை தற்போது வெளியாகி உள்ளது. அதில் காபியில் விஷம் கலந்து கொடுத்து ஆஷிகா பர்வீன் கொலை செய்யப்பட்டு இருப்பது உறுதியாகி உள்ளது.

இதைத்தொடர்ந்து போலீசார், இம்ரான் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அதில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. இதுகுறித்து போலீசார் கூறியதாவது:

இம்ரான் குடும்பத்தினர் புதிதாக இடம் வாங்குவதற்காக ஆஷிகா பர்வீனை அவரது பெற்றோரிடம் இருந்து ரூ.20 லட்சம் கூடுதல் வரதட்சணை வாங்கி வருமாறு கொடுமைப்படுத்தி உள்ளனர். இதை அவரது பெற்றோரால் கொடுக்க முடியவில்லை.

இதுதொடர்பாக ஏற்பட்ட தகராறில் அவரை கொலை செய்ய முடிவு செய்து உள்ளனர். இதற்காக ஊட்டியில் உள்ள ஒரு நகை கடையில் நகைக்கு பாலீஸ் போட பயன்படுத்தும் சயனைடு விஷத்தை வாங்கி காபியில் கலந்து கொடுத்து ஆஷிகா பர்வீனை கொலை செய்து உள்ளனர். இவ்வாறு போலீசார் கூறினார்கள். இதையடுத்து இம்ரான், யாஸ்பின், முக்தார் ஆகிய 3 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

# தமிழகத்தில் 25 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு

சென்னை, செப். 2

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சுங்கச்சாவடிகள் வருகின்றன. தமிழகத்தில் மொத்தம் 67 சுங்கச்சாவடிகள் உள்ளன. இந்த சுங்கச்சாவடிகளில் ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்கள் என 2 முறை கட்டணம் மாற்றி அமைக்கப்படுகிறது.




தேர்தல் காரணமாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கட்டணம் உயர்த்தப்படவில்லை. அதற்கு மாறாக ஜூன் மாதம், 36 சுங்கச்சாவடிகளில் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது. 5 சதவீதம் வரை இந்த சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், வரும் செப்டம்பர் 1 ந்தேதி முதல், ஏனைய 25 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி இன்று முதல் சுங்க கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது. 5 முதல் 7 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இதன் மூலம் இந்த சுங்கச்சாவடிகள் வழியாக கடந்து செல்லும் வாகனங்கள் சுமார் ரூ.5 முதல் ரூ.150 வரை ஏற்கனவே இருக்கும் கட்டணத்தைவிட கூடுதலாக செலுத்த வேண்டியிருக்கும்.

# மழையில் நனைந்தபடி அரசு பஸ்சில் சென்ற பயணிகள்

ஈரோடு, செப். 2

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மாலை நேரங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. பகலில் வெயில் வாட்டி வதைத்தாலும் மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் ஈரோடு பஸ் நிலையத்தில் இருந்து பி3 என்ற டவுன் பஸ் பவானி வரை இயக்கப்பட்டு வருகிறது. இந்த பஸ் ஈரோடு பஸ் நிலையத்தில் இருந்து வீரப்பன்சத்திரம், சூளை, கனிராவுத்தர்குளம், மாமரத்து பாளையம், கரும்பு காடு, சித்தோடு, ஆவின் நிலையம், லட்சுமிநகர் பைபாஸ், காலிங்கராயன் பாளையம் வழியாக பவானி வரையில் இயக்கப்பட்டு வருகிறது.



இந்நிலையில் ஈரோடு மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் சுமார் ஒரு மணி நேரமாக லேசானது முதல் கன மழை வரை என பல்வேறு பகுதியில் மழை பெய்தது. இந்த நிலையில் வழக்கம் போல் பி3 டவுன் பஸ் ஈரோடு பஸ் நிலையத்தில் இருந்து பவானிக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது.

மழை காரணமாக பஸ்சின் மேற்கூரை ஓட்டை உடைசலுடன் இயக்கப்பட்டதால் பயணம் செய்த பயணிகள் பஸ் உள்ளே மழையில் நனைந்தபடி சென்றனர். மேலும் பஸ்சின் இருக்கையில் மழை நீர் கொட்டியதால் இருக்கையில் அமர்ந்து செல்ல முடியாமலும் பஸ்சின் உள்ளே நிற்க கூட முடியாமலும் பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

இந்த சம்பவத்தை பஸ்சில் பயணம் செய்த பயணி ஒருவர் தனது செல்போனில் வீடியோவாக எடுத்து அதை சமூக வலைதளங்களில் வெளியிட்டார்.

அந்த வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

இது போன்ற பஸ்களை மாற்றி விட்டு புதிய பஸ்களை மாவட்ட நிர்வாகம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

# 2 ஆண்டுகளுக்கு பிறகு பிரதமர் வீடு கட்டும் திட்டத்துக்கு கணக்கெடுக்கும் பணி தொடக்கம்

சென்னை, செப். 2

பிரதம மந்திரியின் ஊரக குடியிருப்பு திட்டம் 2016ம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் வீடு இல்லாத ஏழைகள் வீடு கட்ட மத்திய அரசு சார்பில் 1.11 லட்சமும் மாநில அரசு சார்பில் 1.72 லட்சமும் வழங்கப்பட்டு வருகிறது.



தமிழகத்தில் இதுவரை 2 லட்சத்து 82 ஆயிரம் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு உள்ளன. கடந்த 2 ஆண்டுகளாக இந்த திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்தது.

பிரதமர் மோடி 3வது முறையாக பொறுப்பேற்றதும் 202829ம் ஆண்டு வரை இந்த திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் படி தமிழகத்தில் பிரதமர் வீடு கட்டும் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஊராட்சி செயலாளர்கள் இந்த பணியை தகுதி அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. செல்போனில் பயனாளிகளைபுகைப்படம் எடுத்து அவரைப் பற்றிய விவரங்களை சேகரிக்க வேண்டும். 3 மற்றும் 4 சக்கர வாகனங்கள் வைத்திருப்போர், வேளாண் எந்திரங்களை வைத்திருப்பவர்கள், அரசு பணியில் இருப்பவர்கள், மாதம் ரூ.15 ஆயிரத்துக்கும் மேல் சம்பளம் வாங்குபவர்கள் ஆகியோரை பயனாளிகளாக சேர்க்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பாசன நிலம் 2.5 ஏக்கர் இருந்தாலோ, பாசனமற்ற நிலம் 5 ஏக்கர் மற்றும் அதற்குமேல் இருந்தாலோ அவர்களை பயனாளிகளாக சேர்க்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கணக்கெடுப்பு முடிந்ததும் மாவட்ட வரியாக வீடுகள் ஒதுக்கப்பட உள்ளது.

# பொத்தேரியில் கஞ்சா வேட்டை: 500க்கு மேற்பட்ட போலீசார் அதிரடி சோதனை

செங்கல்பட்டு, செப். 2

செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரியில் உள்ள தனியார் கல்லூரியை சுற்றியுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கியுள்ள விடுதிகளில், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் புழக்கம் பெருமளவில் இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் அடிப்படையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில், போதை மாத்திரைகள், கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள், பாங்கு போதை வஸ்து உள்ளிட்ட பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும், கல்லூரியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மாணவர்களை போலீஸ் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# சேவல்களை வைத்து மெகா சூதாட்டம் நடத்திய 13 பேர் கைது

பு.புளியம்பட்டி. செப். 2

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அருகே மாரம்பாளையம், முந்திரி தோப்பு பகுதிகளில் சட்டவிரோதமாக சேவல் சூதாட்டம் நடைபெறுவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன் பேரில் புளியம்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்புரத்தினம் தலைமையில் சத்தியமங்கலம் குற்றப்பிரிவு போலீசார் மற்றும் புளியம்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்தனர்.

அங்கு சிலர் இரு சக்கர வாகனங்களை நிறுத்தி விட்டு வெட்ட வெளியில் கட்டு சேவல்களை வைத்து சூதாட்டம் நடத்தி கொண்டு இருந்தனர்.

அவர்கள் போலீசாரை கண்டதும் தப்பி ஓட முயன்றனர். ஆனால் போலீசார் அவர்களை சுற்றிவளைத்துபிடித்தனர். இதில் சூதாட்டத்திற்கு பயன்படுத்திய 5 சேவல்கள், ரூ.97 ஆயிரத்து 120 பணம், 11 செல்போன்கள் மற்றும் 13 இரு சக்கர வாகனங்கள், சேவல் சூதாட்டத்திற்கு பயன்படுத்திய பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.



பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள்

இதை தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள் சத்தியமங்கலம் உத்தண்டியூர் வீரமணிகண்டன் (33), பவானி அஜித் (26), புளியம்பட்டி பிரேம் ஆனந்த் (31), கோவை மாவட்டம் அன்னூர் சசிகுமார் (30), பவானிசாகர் ரமேஷ் (40), சுபாஷ் (24), அவினாசி மணிகண்டன் (26), அன்னூர் பிரபாகரன் (32), யுவராஜ் (32), சரவணன் (39), தினகரன் (25), லோகநாதன் (64) , ரமேஷ் குமார் (28), என்பது தெரிய வந்தது.

இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து அவர்கள் 13 பேரையும் கைது செய்தனர்.

இந்த பகுதிகளில் வெளி மாவட்டம் மற்றும் சுற்று வட்டாரபகுதியில்இருந்து கட்டு சேவல்களை கொண்டு வந்து சிலர் தொடர்ந்து சூதாட்டம் நடத்தி வருகின்றனர். மேலும் மது போதையில் தகராறில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அந்த வழியாக தோட்டம் காடுகளுக்கு செல்வதற்கு மிகவும் பயமாக உள்ளது.

மேலும் திருட்டு சம்பவம் நடக்கிறது என பொது மக்கள் புகார் கூறினர். எனவே இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என அந்த பகுதியை சேர்ந்தவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# கோத்தகிரியில் பூண்டு கொள்முதல் விலை உயர்வு

கோத்தகிரி, செப். 2

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை சாகுபடிக்கு அடுத்தபடியாக மலைக் காய்கறிகள் விவசாயம் பிரதானமாக உள்ளது.

கோத்தகிரி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் விளைநிலங்களை பதப்படுத்தி கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, முட்டை கோஸ், காலிபிளவர், முள்ளங்கி, நூல்கோல், பீன்ஸ், பூண்டு உள்ளிட்ட மலைக்காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர்.



கோத்தகிரி சுற்று வட்டார பகுதிகளான கட்டபெட்டு, பனஹட்டி, பில்லிக்கம்பை, கக்குச்சி, மிளிதேன், நெடுகுளா உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் முதல் போகமாக கடந்த ஜனவரி மாதமும், 2ம் போகமாக ஏப்ரல் மாதத்திலும் பூண்டு பயிரிட்டனர்.

கடந்த சில வாரங்களாக போதுமான மழை பெய்தது. இதனால் பூண்டு பயிர்கள் செழித்து வளர்ந்து உள்ளது.

இந்தநிலையில் தற்போது மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளில் நீலகிரி பூண்டு உச்சபட்சமாக ரூ.400க்கு கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. கடந்த வாரம் 400 முதல் 300 ரூபாய் கொள்முதல் செய்யப்பட்டது.

சைனா ரக பூண்டு கிலோ ரூ.140க்கு கொள்முதல் செய்யபடுகிறது. இமாச்சல பிரதேசம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பூண்டு விதை வாங்க ஏராளமான வியாபாரிகள் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளுக்கு வருவதால் நீலகிரி பூண்டின் கொள்முதல் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

# ஆகஸ்ட் மாதத்திற்கான பாமாயில், துவரம் பருப்பை செப்.5 வரை பெற்றுக்கொள்ளலாம்

சென்னை, செப். 2

ரேசன் கடைகளில் ஆகஸ்ட் மாதத்திற்கான ரேசன் பொருட்களை பெறாதவர்கள் அதனை பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரேசன் கடைகளில் ஆகஸ்ட் மாதத்திற்கான பாமாயில், துவரம் பருப்பை செப். 5 வரை பெற்றுக்கொள்ளலாம் என்று உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.




இதுதொடர்பாக உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ஆகஸ்ட்

2024 ஆம் மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கீட்டினை பெறாத குடும்ப அட்டைதாரர்கள் பாமாயில், துவரம் பருப்பை அடுத்த மாதம் 5ந்தேதி வரையில் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துள்ளது.

# மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை: குற்றாலம் மெயினருவி, ஐந்தருவியில் குளிக்க தடை

நெல்லை, செப். 2

நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று பரவலாக மழை பெய்தது. குறிப்பாக தென்காசி மாவட்டத்தில் நகர் பகுதிகளிலும் மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள சேர்வலாறு, பாபநாசம் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் திடீர் மழையால் அணைகளுக்கு சற்று நீர்வரத்து ஏற்பட்டது. அந்த அணைகளுக்கு வினாடிக்கு 1,102 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணைகளில் இருந்து 1004 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.



சேர்வலாறு அணை பகுதியில் 7 மில்லிமீட்டரும், பாபநாசத்தில் 2 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. பாபநாசத்தில் 108.70 அடி நீர் இருப்பு உள்ளது. சேர்வலாறில் நேற்று 114 அடி நீர் இருந்த நிலையில், இன்று சுமார் 2 அடி வரை அதிகரித்து 116.89 அடி நீர் இருப்பு உள்ளது. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 68.18 அடியாக உள்ளது.

50 அடி கொள்ளளவு கொண்ட வடக்கு பச்சையாறு அணை நீர்மட்டம் 15.50 அடியாகவும், கொடுமுடியாறு அணையில் 28 அடியும், நம்பியாறு அணை நீர்மட்டம் 13 அடியாகவும் இருக்கிறது. அணை பகுதிகளில் இந்த ஆண்டு பரவலாக பெய்த மழை காரணமாக நீர் இருப்பு கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமாக இருக்கிறது. இதனால் நெல் சாகுபடி பணிகள் தீவிரம் அடைந்துள்ளது.

தென்காசி மாவட்டத்தை பொறுத்தவரை நேற்று காலையில் இருந்தே நகர் பகுதி மற்றும் மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் வானில் கருமேகம் திரண்டு காணப்பட்டது. தொடர்ந்து பரவலாக மழை பெய்தது. குறிப்பாக செங்கோட்டை சுற்று வட்டாரத்தில் கனமழை பெய்தது. அங்கு 17 மில்லிமீட்டர் மழை பெய்தது.

தென்காசி நகர் பகுதி, பாவூர்சத்திரம், ஆலங்குளம், சுரண்டை, கடையம், சிவகிரி, கடையநல்லூர் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களில் சாரல் மழை விட்டு விட்டு பெய்தது. குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியதோடு, இதமான காற்றும் வீசியது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குண்டாறு, அடவிநயினார் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை கொட்டியது. குறிப்பாக குண்டாறு அணை பகுதியில் நேற்று அதிகாலையில் தொடங்கி மதியம் வரையிலும் கனமழை பெய்தது. அங்கு அதிகபட்சமாக 41 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. குண்டாறு அணை ஏற்கனவே மாதக்கணக்கில் நிரம்பி வழிவதால், அணைக்கு வரும் 48 கன அடி நீரும் அப்படியே உபரியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. கடனா அணையின் நீர்பிடிப்பு பகுதியில் 9 மில்லிமீட்டர் மழை பதிவானது. அந்த அணையில் 60 அடி நீர் இருப்பு உள்ளது. 84 அடி கொண்டராமநதி அணை நீர்மட்டம் 65 அடியாக உள்ளது. மாவட்டத்தின் மிகப்பெரிய அணையான அடவிநயினாரில் 109.50 அடியாக உள்ளது. அந்த அணைக்கு வினாடிக்கு 36 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

குற்றாலம் மலைப்பகுதியில் பெய்துவரும் கன மழை காரணமாக மெயினருவி, ஐந்தருவியில் வெள்ளம் நீடிப்பதும், குறைவதுமாக இருந்து வருகிறது. இதனால் சுற்றுலாப்பயணிகளுக்கு அவ்வப்போது அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தண்ணீர் வரத்து அதிகரிக்கும்போது தடை விதிக்கப்படுகிறது. இன்று காலை நிலவரப்படி மெயினருவி, ஐந்தருவியில் நீர் வரத்து அதிகரித்து காணப்படுவதால், சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் பழைய குற்றாலம் அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சனி பிரதோஷம் சதுரகிரியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



வத்திராயிருப்பு, செப். 2

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் உள்ளது. மாதந்தோறும் அமாவாசை, பவுர்ணமி நாட்களில் தலா 4 நாட்கள் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆவணி மாத அமாவாசையை முன்னிட்டு இன்று முதல் வருகிற 3ந் தேதி வரை பக்தர்களுக்கு சாமி தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. முதல்நாளான இன்று சனி பிரதோஷத்தை முன்னிட்டு அதிகாலை முதல் மதுரை, விருதுநகர், திருச்சி, சிவகங்கை, கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலையடிவாரத்தில் குவிந்தனர்.

இன்று காலை 6.20 மணிக்கு வனத்துறையினர் நுழைவுவாயில் திறந்து விட்டனர். அதனை தொடர்ந்து உடைமைகள் சோதனை செய்யப்பட்டு பக்தர்கள் மலையேற அனுமதிக்கப்பட்டனர். சிறுவர்கள் முதல் இளைஞர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் ஆர்வத்துடன் மலையேறி சாமி தரிசனம் செய்தனர்.

மலை பாதையில் உள்ள வழுக்குப்பாறையில்பக்தர்கள்குளித்தனர்.

மலைப்பாதையில் உள்ள வழுக்குப்பாறையில் சிறிதளவு தண்ணீர் சென்றது. அதில் சில பக்தர்கள் குளித்துவிட்டு மலையேறி சென்றனர். நடக்க முடியாத வயதானவர்கள் டோலி மூலம் சுமை தூக்கும் தொழிலாளிகள் சுமந்து சென்று சாமி தரிசனம் செய்ய வைத்தனர்.

இன்று சனி பிரதோஷத்தை முன்னிட்டு மாலையில் சுந்தர மகாலிங்கம் சாமிக்கு பால், பழம், பன்னீர், இளநீர் உள்ளிட்ட 18 வகையான அபிஷேகங்கள் நடைபெற உள்ளது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சுந்தர மகாலிங்கம் சாமி பரம்பரை அறங்காவலர் ராஜா என்ற பெரிய சாமி செயல் அலுவலர் ராம கிருஷ்ணன் ஆகியோர் செய்துள்ளனர்.

10 வயதுக்கு குறைவானவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மலையேற தடைவிதிக்கப்பட்டிருந்தது. எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை கொண்டு செல்லக்கூடாது. இரவில் மலை கோவிலில் தங்க அனுமதியில்லை போன்ற கட்டுப்பாடுகளை வனத்துறையினர் விதித்திருந்தனர். சதுரகிரி மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் மழை பெய்தால் பக்தர்களுக்கான அனுமதி ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# டாஸ்மாக் கடைகளில் நவம்பர் மாதம் முதல் டிஜிட்டல் மூலம் மது விற்பனை



சென்னை, செப் 2

தமிழ்நாட்டில் மொத்தம் 4,829 டாஸ்மாக் மதுக்கடைகள் உள்ளன. இந்த கடைகள் மூலம் செய்யப்பட்ட மது விற்பனை மூலம் கடந்த ஆண்டு (20232024) ரூ.45 ஆயிரம் கோடி அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது. அதாவது, சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.123 கோடியும், மாதத்துக்கு ரூ.3,698 கோடியும் மது விற்பனை நடைபெற்றுள்ளது.

ஆனால், கொரோனா காலத்துக்கு பிறகு மது விற்பனை குறைந்து போனதுடன் டாஸ்மாக் நிறுவனமும் நஷ்டத்தில் இயங்கத் தொடங்கத் தொடங்கியது. இந்த நிலையில், வாடிக்கையாளர்களின் (மதுப் பிரியர்கள்)நன்மதிப்பைபெறும் வகையில், டிஜிட்டல் சேவையை அறிமுகப்படுத்தடாஸ்மாக்நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது.

அதாவது, மது பாட்டிலுக்கு கூடுதலாக ரூ.10 வசூலிக்கப்படுவதை தடுக்கவும், மது பாட்டில்கள் கொண்டுவரப்படும்போது போக்குவரத்தில் ஏற்படும் முறைகேட்டை தவிர்க்கவும், கடைகளில் இருப்பு நிலவரத்தை கண்காணிக்கவும் மது விற்பனையில் டிஜிட்டல் முறை கொண்டுவரப்பட இருக்கிறது.

இதன்மூலம், தொழிற்சாலைகளில் மது உற்பத்தியாகி, பாட்டில்களில் அடைக்கப்பட்டு வெளியேறி, குடோன்களின் தங்கி, பின்னர் கடைகளுக்கு வந்து விற்பனையாகி மதுப்பிரியர்களின் கைகளில் சேர்வது வரை, அதாவது உற்பத்தி முதல் விற்பனை வரை அனைத்து தரவுகளையும் கியூஆர் கோடு மூலம் தெரிந்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 4,829 கடைகளிலும் இந்த டிஜிட்டல் வசதியை கொண்டுவருவதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக, பரிசார்த்த முறையில் கோவை வடக்கு, வடசென்னை ஆகிய இடங்களில்உள்ள 266 டாஸ்மாக் மதுக்கடைகளில் தீபாவளிக்கு பிறகு, வரும் நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

அதாவது, கோவை வடக்கில் உள்ள 166 கடைகளிலும், வடசென்னையில் உள்ள 100 கடைகளிலும் இந்த டிஜிட்டல் நடைமுறை கொண்டுவரப்பட இருக்கிறது. இந்த கடைகளுக்கு இணையதள வசதி உள்ளிட்டவற்றை செய்துகொடுக்க மத்திய அரசின் ரெயில்டெல் நிறுவனம் ரூ.294 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. தற்போது, கோவை வடக்கு, வடசென்னையில் உள்ள டாஸ்மாக் கடைகளுக்கு இணையதளம் வசதி செய்து கொடுக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இனி மது ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் மது வகைகள் பாட்டில்களில் அடைக்கப்பட்ட உடன், அதில் கியூ ஆர் கோடு அடங்கிய ஸ்டிக்கர் ஒட்டப்படும். அதில், பாட்டிலில் மது அடைக்கப்பட்ட நாள், நேரம் டிஜிட்டல் முறையில் ஏற்றப்படும். பிறகு அது சரக்கு வாகனத்தில் ஏற்றப்பட்டது, அரசு குடோனுக்கு வந்தது, அங்கிருந்து கடைகளுக்கு சென்றது, பிறகு விற்பனை செய்யப்பட்டது என அனைத்து தகவல்களும் பதிவு செய்யப்படும்.

மதுப்பிரியர்கள் இந்த மது பாட்டில்களை வாங்கும்போது அவர்களுக்கு ரசீது வழங்கப்படும். இதனால், அவர்கள் கூடுதல் பணம் கொடுக்க தேவையில்லை. பணத்தையும் ஜிபே மூலம் எளிதாக செலுத்தலாம். மது பாட்டில்களை வாங்கிய பிறகு, அதில் உள்ள கியூ ஆர் கோடினை செல்போனில் ஸ்கேன் செய்து பார்த்தால் முழுமையான தகவல்களை தெரிந்து கொள்ள முடியும்.

அதே நேரத்தில், மதுக் கடைகளில் உள்ள ஊழியர்களின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பு கேமரா மூலம் சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் இருந்து கண்காணிக்க முடியும்.

இதுபோன்ற டிஜிட்டல் நடைமுறையால், நீண்டகால பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும் என டாஸ்மாக் நிர்வாகம் நம்புகிறது. அநேகமாக, அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளில் டிஜிட்டல் மூலம் மது விற்பனை நடைபெறும் என தெரிகிறது.

# இளைஞர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது: அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா



சென்னை, செப். 4

இளைஞர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது என்று அமைச்சர் டி.ஆர். பி.ராஜா கூறினார்.

தமிழகத்தில் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசுடன் கூகுள் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்தஒப்பந்தம்குறித்து அமைச்சர் டிஆர்பி.ராஜா பேசியதாவது:

கூகுள் உடனான எங்களின் கூட்டாண்மை, தமிழ்நாட்டை ஒரு ஆக்கப்பூர்வமான ஏ.ஐ. மற்றும் மேம்பட்ட எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக நிறுவுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க செயல்பாடு ஆகும் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மேட் இன் இந்தியா பிக்சல் 8 போன் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுவது உள்பட மேம்பட்ட உற்பத்தியில் கூகுளுடன் கூட்டிணைவதில் மகிழ்ச்சியடைகிறோம். கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு ஏ.ஐ. ஆய்வகங்களின் கீழ் உள்ள முக்கிய செயற்கை நுண்ணறிவு முயற்சிகளை ஆராயும்.

நாம் தொழில்நுட்பத்தை மட்டும் பின்பற்றவில்லை, எதிர்காலத்தில் நமது மாநிலத்தை முன்னெடுத்துச் செல்ல அதன் சக்தியைப் பயன்படுத்துகிறோம். முதல் அமைச்சரின் தொலைநோக்குபார்வை கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய திறன் மேம்பாட்டு முயற்சியான நான் முதல்வன் திட்டத்தின் மூலம், தமிழக இளைஞர்களை எதிர்காலத்தில் தயார்படுத்தும் ஏ.ஐ. திறன்கள் கொண்டிருப்பதையும், ஸ்டார்ட் அப்கள், இயக்கம், சுகாதாரம் மற்றும் பிற நடைமுறை சவால்கள் போன்ற முக்கிய துறைகளில் புதுமைகளை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

2 மில்லியன் இளைஞர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்துவதற்காக அதிநவீன ஏ.ஐ. திறன்களை கொண்டு அவர்களை தயார்படுத்துவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் கூகுள் உடனான முயற்சிகளைக் காண எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பத்தூரில் பெண்கள் விடுதி அறைக்குள் எட்டிப் பார்த்த இளைஞர் கைது




திருப்பத்தூர், செப். 2

திருப்பத்தூரில் செயல்பட்டு வரும் அரசு பெண்கள் விடுதியில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

இந் நிலையில், விடுதி அருகே கம்ப்யூட்டர் சென்டர் நடத்தி வரும் பெட்ரிக் என்ற இளைஞர், விடுதியின் ஜன்னல் வழியாக மாணவிகள் அறையை எட்டிப்பார்த்ததாக கூறப்படுகிறது.

இதனைக் கண்டு அலறி கூச்சலிட்ட மாணவிகள், இதுகுறித்து உடனடியாக விடுதி காப்பாளரிடம் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து விடுதி காப்பாளர் அளித்த புகாரின்பேரில் பெட்ரிக்கை கைது செய்த போலீசார், அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# போதைக்கு அடிமையாகும் பள்ளி மாணவர்கள் நீதிபதி வேதனை




மதுரை, செப். 2

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2021ம் ஆண்டு சென்ட்ரல் போலீசார் சோதனையில் 21 கிலோ மதிப்பிலான ஹெராயின் சிக்கியது. இந்த வழக்கு தொடர்பாக மாரிமுத்து, அன்சார் அலி, இம்ரான் கான், கசாலி மரைக்காயர் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து மதுரை முதலாவது கூடுதல் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதே நேரத்தில் வழக்கை முறையாக விசாரிக்காத. ஆய்வாளர் ஜெயபிரகாஷ் மற்றும் உதவி ஆய்வாளர் முருகப் பெருமாள் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வழக்கில் உரிய வழிகாட்டுதல் வழங்காமல் இருந்ததாக தெரிந்தால்,

சென்ட்ரல் துணை காவல் கண்காணிப்பாளர் போதைப்பொருள்தடுப்பு காவல்நிலைய கண்காணிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

தற்போது பள்ளி மாணவர்கள் கைகள் வரை போதைப்பொருள் வந்துவிட்டதாக கூறிய நீதிபதி, போதைப்பொருள்களைத் தடுக்க மாவட்டந்தோறும் ஒரு பொறுப்பு அதிகாரி நியமிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதை அரசு செயல்படுத்தி இருந்தால் இது போன்ற தவறுகள் நடைபெறாது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.க.வில் உறுப்பினர் சேர்க்கை: தமிழகம் முழுவதும் நாளை தொடக்கம்




சென்னை, செப். 2

நாடு முழுவதும் பா.ஜ.க.வில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நாளை (திங்கட்கிழமை) தொடங்குகிறது. டெல்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதல் உறுப்பினராக பிரதமர் மோடி தனது உறுப்பினர் அட்டையை புதுப்பித்துக் கொள்கிறார். அன்றைய தினம் தமிழ்நாட்டிலும் உறுப்பினர் சேர்க்கை தொடங்குகிறது. மூத்த தலைவரான எச்.ராஜா முதல் உறுப்பினராக இணைகிறார். இந்த உறுப்பினர் சேர்க்கையின் போது பழைய உறுப்பினர்களும் தங்கள் உறுப்பினர் அட்டையை புதுப்பித்து கொள்ளலாம் என்றும் புதிதாகவும் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க பா.ஜ.க. தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர். எனவே உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக ஒவ்வொரு மண்டலத்துக்கும் தனியாக நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பூத்திலும் குறைந்தப்பட்சம் 200 பேரை சேர்க்க வேண்டும் என்று பா.ஜ.க. தலைமை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர்சேர்க்கைக்கு '8800002024' என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு மிஸ்டுகால் கொடுக்க வேண்டும். அந்த எண்ணுக்கு வரும் லிங்கை திறந்து அதில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை எழுதி அனுப்பினால் போதும். உடனே அவர்கள் உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேளாங்கண்ணி ஆலய திருவிழா பெசன்ட் நகருக்கு தினமும் 100 சிறப்பு பஸ்கள்



சென்னை, செப். 2

சென்னை பெசன்ட் நகர் வேளாங்கண்ணி ஆலய ஆண்டு திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். இந்த திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறுகிறது.

இதையொட்டி தினமும் சிறப்பு பிரார்த்தனைகள், சிறப்பு ஆராதனைகள், திருப்பலி நடைபெறுகிறது. இதனால் தினமும் ஏராளமான பொதுமக்கள் இந்த விழாவில் பங்கேற்க வருவார்கள்.

இதன் காரணமாக குறிப்பிட்ட நாட்களுக்கு சென்னை பெசன்ட் நகர் பகுதியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள்பெசன்ட்நகர்வேளாங்கண்ணி ஆலய ஆண்டு திருவிழாவில் பங்கேற்பதற்கு வசதியாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து பெசன்ட் நகருக்கு தினமும் 100க்கும் மேற்பட்ட சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக மாநகர போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியதாவது:

பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. வருகிற 8ந்தேதி விழா நிறைவடைகிறது. இதையொட்டி, மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் பயணிகளின் வசதிக்காக சென்னையின் பல்வேறு இடங்களிலிருந்து அன்னை வேளாங்கண்ணி ஆலயத்துக்கு வருகிற 8ந்தேதி வரைகூடுதல் பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

பெரம்பூர், எண்ணூர், தாம்பரம், திருவொற்றியூர், கோயம்பேடு உள்ளிட்ட பல இடங்களில் இருந்து தினமும் மாலை 4 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை 100க்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கப்படுகிறது. பயணிகள்நெரிசல் மிகுந்த நேரங்களில் இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். இந்த நாட்களில் முக்கிய பஸ் நிலையங்களில் அலுவலர்களை நியமித்து பஸ்கள் இயக்கத்தை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# காஞ்சிபுரத்தில் தயாராகி அமெரிக்கா செல்லும் தங்கத்தேர்



காஞ்சிபுரம், செப். 2

காஞ்சிபுரத்தில் தயாராகி அமெரிக்கா செல்லும் தங்கத்தேர்காஞ்சிபுரம்:

கோவில் நகரமான காஞ்சிபுரத்தில் செயல்படும் ராஜா ஆன்மிகம் எனும் தனியார் நிறுவனம் கோவில்களுக்கு தேவையான வாகனம், கொடிமரம் தங்க வெள்ளி கவசங்கள், பஞ்சலோக சிலைகள் மற்றும் பூஜை பொருட்கள் மேளதாளங்கள் உள்ளிட்டவற்றை தயாரித்து, உள்நாடு, வெளிநாடு, கோவில்களுக்கு விற்பனை செய்கிறது.

இந்த தனியார் நிறுவனத்திடம் அமெரிக்கா நாட்டில் உள்ள வாஷிங்டன் மாகாணத்தை சேர்ந்த சியாட்டின் நகரத்தின் அருகில் ரெட்மண்டில் அமைந்துள்ள வேதிக் கோவில் நிர்வாகம் தங்கத் தேர் ஒன்றை செய்து தரும்படி கேட்டுக்கொண்டது.

அதன்படி முதல் முறையாக ராஜா ஆன்மிகம் நிறுவனம் மரங்களை பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க இரும்பு ஆங்கிள்களை பயன்படுத்தியும் 6 பகுதிகளாக பிரித்து எடுத்து செல்லும் வகையில் செப்பு தகடுகளில் சிற்பங்களை செதுக்கி தங்க முலாம் பூசி, தங்கத்தேரை செய்து முடித்துள்ளது.

தங்கத்தேரில் 8 கருடன்கள், 16 கந்தர்வர்கள், சூரிய பகவான் 2 குதிரைகள் உள்ளிட்ட அழகிய வடிவிலான சிலைகளையும் பொருத்தி உள்ளனர்.

பழமையை மாற்றாமல் 23 அடி உயரத்துடனும் 3½ டன் எடையுடன் ரூ.1¼ கோடி மதிப்பீட்டில் 75 நாட்களில் தயார் செய்து முடித்துள்ளது.

இன்னும் சில நாட்களில் 6 பகுதிகளாக விமானம் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பும் பணி நடைபெறுவதாக தனியார் நிறுவனத்தின் உரிமையாளர் நாகராஜன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# விஜய் ஆண்டனியின் 'ஹிட்லர்' பட ரிலீஸ் தேதி அறிவிப்பு




இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி இறுதியாக நடித்த 'ரோமியோ', 'மழைப்பிடிக்காத மனிதன்' திரைப்படங்கள் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது, 'படைவீரன்', 'வானம் கொட்டட்டும்' உள்ளிட்ட படங்களை இயக்கிய தனா இயக்கத்தில் 'ஹிட்லர்' என்கிற புதிய படத்தில் விஜய் ஆண்டனி நடித்துள்ளார்.

இதில் ரியா சுமன் நாயகியாக நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகர் சரண்ராஜ் இப்படத்தில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிந்த நிலையில், தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல் தயாரிக்கும் இப்படத்தில் கௌதம் வாசுதேவ் மேனன் உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் முன்னதாக வெளியானது. இந்த நிலையில், இப்படம் செப்டம்பர் 27ம் தேதி திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# இப்படிதான் சித்தார்த் எனக்கு ப்ரோபோஸ் செய்தார் அதிதி சொன்ன சுவாரசிய கதை

நடிகர் சித்தார்த்தும் நடிகை அதிதி ராவும் காதலத்தி வந்த நிலையில் சில மாதங்களுக்கு முன் இருவரும் நெருங்கிய உறவினர்கள் இடையே நிச்சயம் செய்துக்கொண்டனர்.

கடைசியாக சஞ்சய் லீலா பன்சாலி இயக்கத்தில் வெளிவந்த ஹீராமந்தி வெப் சீரிசில் அதிதி ராவ் ஒரு முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துருந்தார். இந்நிலையில் சமீபத்தில் அதிதி ராவ் சமீபத்தில் அளித்த நேர்காணலில் நடிகர் சித்தார்த் எப்படி அதிதிக்கு காதல் ப்ரோப்போஸ் செய்தார் என கூறினார்.

அதில் அவர் கூறியதாவது " நான் என் பாட்டியுடம் மிகவும் நெருக்கமாக இருந்தேன். அவரை எனக்கு சிறுவயதில் இருந்து மிகவும் பிடிக்கும். என்னுடைய பாட்டி ஐதராபாத்தில் ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். ஒரு நாள் சித்தார்த் என்னிடம் வந்து அந்த பள்ளிக்கூடத்தை பார்க்க வேண்டும் என்றார். நானும் அழைத்துச் சென்றேன். அங்கு சென்றவுடன் இந்த பள்ளிக்கூடத்தில் எங்கு அதிகமாக நீ உன் சிறுவயதை செலவிட்டார் என கேட்டார். நான் அந்த இடத்தை காண்பித்தேன். திடீர் என்று கீழே முட்டிப் போட்டு எதையோ எடுத்தார். நான் அவர் ஷூலேஸ் கட்டுகிறாரோ என நினைத்தேன். ஆனால் அவர் முட்டிப்போட்டு எனக்கு ப்ரோப்போஸ் செய்தார். என்னுடைய பிடித்தமான இடத்திற்கு என்னை அழைத்து வந்து பாட்டியின் ஆசிர்வாதத்துடன் ப்ரோபோஸ் செய்வது அவருடைய பிளான்" என்று கூறினார். மேலும் அவரது திருமணம் வனப்பார்த்தியில் உள்ள 400 வருடங்கள் பழமையான கோவிலில் திருமணம் நடக்கப்போவதாக கூறியுள்ளார்.




# பாரா ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல்: இந்தியாவின் ரூபினா வெண்கலம் வென்றார்



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

துப்பாக்கிச் சுடுதலில் பெண்கள் பிரிவில் இந்தியாவின் அவனி லெகரா தங்கமும், மோனா அகர்வால் வெண்கலமும் வென்றுள்ளனர். ஆண்கள் பிரிவில் மணீஷ் நர்வால் வெள்ளி வென்றார்.

இதன்மூலம் பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி 1 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தம் 4 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

இதற்கிடையே, பெண்கள் பிரிவில் 10 மீட்டர் ஏர் ரைபிள் எஸ்.எச்.1 பிரிவில் இந்தியாவின் ரூபினா பிரான்சிஸ் 7வது இடம் பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இந்நிலையில், இறுதிப்போட்டியில் இந்தியாவின் ரூபினா பிரான்சிஸ் 3வது இடம்பிடித்து வெண்கலம் வென்றார். இதன்மூலம் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 5 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

# அமெரிக்க ஓபன்: கோகோ காப், சபலென்கா 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான பெலாரசின் அரினா சபலென்கா, ரஷியாவின் எகடெரினா அலெக்ஸாண்ட்ரோவா உடன் மோதினார்.

இதில் சபலென்கா முதல் செட்டை 2-6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்தார். இதில் சுதாரித்துக் கொண்ட சபலென்கா அடுத்த இரு செட்களை 6-1, 6-2 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார்.

இறுதியில், சபலென்கா 2-6, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் வென்று 4வது சுற்றுக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் 4வது சுற்று ஆட்டத்தில் அரினா சபலென்கா, பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டென்ஸ் உடன் மோத உள்ளார். மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் கோகோ காப், உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவை 36, 63, 63 என்ற செட் கணக்கில் வென்று 4வது சுற்றுக்கு முனனேறினார். நாளை நடைபெறும் 4வது சுற்றில் கோகோ காப், சக வீராங்கனை எம்மா நவாரோவை சந்திக்கிறார்.

# பாரா ஒலிம்பிக்: துப்பாக்கிச் சுடுதலில் இந்தியாவின் ஸ்வரூப் ஏமாற்றம்



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

துப்பாக்கிச் சுடுதலில் பெண்கள் பிரிவில் இந்தியாவின் அவனி லெகரா தங்கமும், மோனா அகர்வால் வெண்கலமும் வென்றுள்ளனர். ஆண்கள் பிரிவில் மணீஷ் நர்வால் வெள்ளி வென்றார்.

இதன்மூலம் பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி 1 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தம் 4 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

இந்நிலையில், ஆண்கள் பிரிவில் 10 மீட்டர் ஏர் ரைபிள் எஸ்.எச்.1 பிரிவில் இந்தியாவின் ஸ்வரூப் உன்ஹல்கர் 613.4 புள்ளிகள் எடுத்து 14வது இடம் பிடித்ததால் பதக்க வாய்ப்பு பெறும் பட்டியலில் இடம்பெறவில்லை.

# சூப்பர் ஸ்டார் படம் வர்றதுதான் சரியாக இருக்கும்.. கங்குவா ரிலீஸ் தேதி குறித்து பேசிய சூர்ய



96 பட இயக்குநர் பிரேம் குமார் இயக்கத்தில் நடிகர் கார்த்தி நடித்துள்ள படம் மெய்யழகன். 'கார்த்தியின் 27' வது படமான இந்த படத்தை சூர்யா ஜோதிகாவின் தயாரிப்பு நிறுவனமான 2டி என்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ளது.

இப்படத்தில் அரவிந்த்சாமி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் இந்தாண்டு செப்டம்பர் 27 ஆம் தேதி வெளியாக இருக்கிறது.

படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று கோயம்புத்தூரில் மிக பிரம்மாண்ட முறையில் நடைபெற்றது. 96 திரைப்படத்திற்கு இசையமைத்த கோவிந்த் வசந்தா இப்படத்திற்கும் இசையமைத்துள்ளார்.

இந்த இசை வெளியீட்டு விழாவில் நடிகர் சூர்யா கலந்து கொண்டார். அப்போது பேசிய சூர்யா, "கங்குவா படம், கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகளாக, ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் கடின உழைப்பில் உருவாகியுள்ளது. படம் அக்டோபர் 10ஆம் தேதி ரிலீஸ் செய்ய திட்டமிடப்பட்டது.

ஆனால் அன்றைய தினத்தில் மூத்தவர், நான் பிறக்கும்போது சினிமாவில் நடிக்கத் தொடங்கியவர். 50 ஆண்டுகளாக தமிழ் சினிமாவின் அடையாளமாக இருக்கக்கூடிய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் வேட்டையன் படமும் ரிலீஸ் ஆகின்றது. அதனால் சூப்பர் ஸ்டார் படம் வர்றதுதான் சரியாக இருக்கும்.

கங்குவா ஒரு குழந்தை. அது எப்போது ரிலீஸ் ஆகின்றதோ, அப்போதுதான் அதன் பிறந்த நாள். அன்றைய தினத்தை பண்டிகையாக நீங்கள் கொண்டாடுவீங்கனு நம்புறேன்" என்று பேசினார்.

கங்குவா திரைப்படம் அக்டோபர் 10 வெளியாகவில்லை எனவும், மாற்றுத் தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் படத்தின் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா தெரிவித்துள்ளார்.

# சென்னையில் ஃபார்முலா 4 கார் பந்தயம்.. அமைச்சர் உதயநிதிக்கு சினிமா பிரபலங்கள் வாழ்த்து



சென்னைதீவுத்திடல் பகுதியில் பார்முதலா 4 கார் பந்தயத்தை விளையாட்டுத் தறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தெற்காசியாவில் முதல்முறையாக சென்னையில் இரவு நேர ஃபார்முலா 4 கார் பந்தயம் நடைபெற்று வருவதை ஒட்டி அமைச்சர் உதயநிதிக்கு சினிமா பிரபலங்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இயக்குநர் நெல்சன் தனது எக்ஸ் பக்கத்தில், "தெற்காசியாவிலேயே இரவு நேர ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை கொண்டுவந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலிக்கு வாழ்த்துக்கள். ஃபார்முலா 4 விளையாட்டு துறையின் மிகப்பெரிய முன்முயற்சியாக இருக்கும்" என்று வாழ்த்து தெரிவித்தார்.

நடிகர் விஷ்ணு விஷால் தனது எக்ஸ் பக்கத்தில், "தெற்காசியாவிலேயே இரவு நேர ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நம்ம சென்னைக்கு கொண்டு வந்ததற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள். நிச்சயமாக இது ஒரு த்ரில்லிங் ரைடாக இருக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனி தனது எக்ஸ் பக்கத்தில், "சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் முயற்சியால், இந்தியாவில் முதல் முறையாக, இந்த ஆண்டில் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஃபார்முலா 4 கார் பந்தயம், சென்னையின் புதிய வரலாறாக இருக்கப் போகிறது" என்று தெரிவித்துள்ளார். இசையமைப்பாளர் அனிருத் தனது எக்ஸ் பக்கத்தில், "தெற்காசியாவின் முதல் இரவு நேர ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நம்ம சென்னைக்கு கொண்டு வந்ததற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள். நிச்சயமாக இது ஒரு பெரிய வெற்றியாக இருக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் தனது எக்ஸ் பக்கத்தில், "இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் நடைபெறவிருக்கும் ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயம் ஒரு முக்கியமான நிகழ்வாக அமைய போகிறது. இந்த ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை சென்னைக்கு கொண்டு வந்ததற்காக உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஓபன்: 4வது சுற்றுக்கு முன்னேறினர் ஸ்வரேவ், காஸ்பர் ரூட்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது. இதில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டத்தில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வரேவ், அர்ஜென்டினா வீரர் தாமஸ் எட்சவரி உடன் மோதினார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஸ்வரேவ் 5-7, 7-5, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் நார்வே வீரர் காஸ்பர் ரூட், சீனாவின் ஷாங் ஜங்செங்கை 6-7 (1-7), 3-6, 6-0, 6-3, 6-1 என்ற செட் கணக்கில்வீழ்த்திகாலிறுதிக்குமுந்தையசுற்றுக்குமுன்னேறினார்.

# 2வது இன்னிங்சிலும் ஜோ ரூட் சதம்: இலங்கை வெற்றிபெற 483 ரன்களை இலக்காக நிர்ணயித்தது இங்கிலாந்து



இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இலங்கை பந்துவீச்சு தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 427 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஜோ ரூட் சதமடித்து 143 ரன்னில் ஆட்டமிழந்தார். கஸ் அட்கின்சன் சதமடித்து 118 ரன்னில் அவுட்டானார். பென் டக்கெட் 40 ரன்னிலும், ஹாரி புரூக் 33 ரன்னிலும் அவுட்டாகினர்.

இலங்கை சார்பில் அஷிதா பெர்னாண்டோ 5 விக்கெட்டும், மிலன் ரத்னாயகே, லஹிரு குமரா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்

இதையடுத்து, இலங்கை அணி முதல் இன்னிங்சில் களமிறங்கியது. இங்கிலாந்து வீரர்கள் துல்லியமாக பந்துவீசினர். இதனால் சீரான இடைவெளியில் இலங்கை அணியின் விக்கெட்டுகள் வீழ்ந்தன.

இறுதியில், இலங்கை அணி முதல் இன்னிங்சில் 196 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அந்த அணியில் அதிகபட்சமாக கமிந்து மெண்டிஸ் அரை சதமடித்து 74 ரன்கள் எடுத்தார்.

இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ், கஸ் அட்கின்சன், ஒல்லி ஸ்டோன், மேத்யூ பாட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 231 ரன்கள் முன்னிலை பெற்ற இங்கிலாந்து 2வது இன்னிங்சை ஆடியது. அந்த அணியின் வீரர்கள் விரைவாக ரன் எடுக்க முயன்றனர். இதனால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன.

அந்த அணியின் ஜோ ரூட் சிறப்பாக ஆடி 34வது சதமடித்து அசத்தினார். அவர் 103 ரன்னில் அவுட்டானார். ஹாரி புரூக் 37 ரன்னும், ஜேமி ஸ்மித் 26 ரன்னும், பென் டக்கெட் 24 ரன்னும் எடுத்தனர்.

இறுதியில், இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் 251 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இலங்கை சார்பில் அசிதா பெர்னாண்டோ, லஹிரு குமாரா தலா 3 விக்கெட்டும், ரத்னாயகே, பிரபாத் ஜெயசூர்யா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 483 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்குகிறது.

# டி20 கிரிக்கெட்டில் அதிக சிக்சர்கள்: கிறிஸ் கெயில் சாதனையை முறியடித்த பதோனி



இந்தியாவில் தற்போது டெல்லி பிரீமியர் லீக் டி20 தொடர் நடந்து வருகிறது. இந்த தொடரில் வடக்கு டெல்லி, தெற்கு டெல்லி அணிகள் மோதின. டாஸ் வென்ற தெற்கு டெல்லி அணி பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய தெற்கு டெல்லி அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 308 ரன்கள் குவித்தது. தொடக்க ஆட்டக்காரர் ஷர்தாக் ரேய் 11 ரன்னில் அவுட்டானார். அடுத்து ஜோடி சேர்ந்த ஆயுஷ் பதோனி, பிரியன்ஷ் ஆர்யா இருவரும் சூறாவளியாக சுழன்று அடித்தனர். ஆயுஷ் பதோனி அதிரடியாக ஆடி 55 பந்தில் 19 சிச்கர், 8 பவுண்டரி உள்பட 165 ரன்கள் குவித்தார். பிரியன்ஷ் ஆர்யா 55 பந்தில் 10 சிக்சர், 10 பவுண்டரி உள்பட 120 ரன்கள் குவித்தார். தெற்கு டெல்லி அணி பேட்டிங் மொத்தமாக 31 சிக்சர்கள் அடித்துள்ளது. பிரமாண்ட இலக்கை நோக்கி ஆடிய வடக்கு டெல்லி அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 196 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் தெற்கு டெல்லி அணி 112 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், 19 சிக்சர்கள் அடித்ததன் மூலம் டி20 கிரிக்கெட்டில் அதிக சிக்சர்கள் அடித்த கிறிஸ் கெயிலின் சாதனையை ஆயுஷ் பதோனி முறியடித்துள்ளார். வங்கதேச டி20 லீக் தொடரில் கிறிஸ் கெயில் அதிகபட்சமாக 18 சிக்சர் அடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.